1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (5 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

Q1 அதிகச் சம்பளம் கொடுப்பதாக ____________ கூறி அழைத்துவரப்பட்ட வெளிநாட்டு ஊழியர்கள் பலர் ஏமாற்றப்பட்டனர்.

Q2 விடுதலைபெற நம் நாடு பட்ட துயரங்களை அறியாத இளைஞர்கள் பலரும் நம் நாட்டின் ____________ உணராமல் இருக்கின்றனர்.

Q3 மாறன் ____________ வாழாததால் தன் உடல் பருத்து இனிப்புநீர் நோய்க்கு ஆளாகிவிட்டான்.

Q4 தன் பெற்றோர் மறுத்தபோதும் இளஞ்செழியன் அவர்களிடம் அன்பரசியையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று ____________.

Q5 அரசு தவறு செய்யும்போது அதனை ____________ யாருமில்லை என்றால் அந்த அரசு தானே வீழ்ச்சியடையும் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

(1) சீரும் சிறப்பும்
(2) இடித்துரைக்க
(3) இனிக்கப் பேசி
(4) அருமை பெருமைகளை
(5) ஒத்துப்பாடினான்
(6) கண்ணும் கருத்துமாக
(7) பழிவாங்க
(8) ஆசைவார்த்தை
(9) வாயைக்கட்டி
(10) ஒருகாலில் நின்றான்

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும். உமது விடைகளை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q6 சிங்கப்பூரர்கள் சிலரின் மனப்போக்கால் வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்கின்றது.

சிங்கப்பூரர்கள் சிலரின் மனப்போக்கு ______________________________

Q7 பள்ளித் தமிழ் மன்றம் இளையர்களிடையே தமிழ்மொழிப் புழக்கத்தை அதிகரிக்கத் தமிழ்மொழி வாரத்தைக் கொண்டாடவிருக்கிறது.

தமிழ்மொழிப் புழக்கத்தை அதிகரிக்கத் தமிழ்மொழி வாரம் ______________________________

Q8 நம்முடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கின்றபோதுதான் நம் சிந்தனை விரிவடைகிறது.

நம்முடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டாலொழிய ______________________________

Q9 நம்முடைய நலனில் அக்கறை உடையவர்களே நல்ல நண்பர்கள் ஆவர்.

நல்ல நண்பர்கள் நம்முடைய ______________________________

Q10 கடின உழைப்பு ஆரோக்கியத்தைக் கெடுக்கும் என்று சிலர் தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

கடின உழைப்பு ஆரோக்கியத்தைக் கெடுக்கும் என்பது ______________________________



More papers at www.testpapersfree.com

13 அமைப்புச் சொற்கள் (10 மதிப்பெண்கள்)

ீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் பழமொழிக்கேற்ப 'ஒரு நாடோ சமுதாயமோ அல்லது ஒரு குடும்பமோ அல்லது ஒரு தனிமனிதனோ சிறந்து விளங்க வேண்டுமென்றால் நோயற்ற வாழ்க்கை அமைய வேண்டும். நோய் Q11__________ முன்னரே நோய் வராமல் தடுத்துக் கொள்ள வேண்டும். நோய்வருவதற்கான காரணங்களை அறிந்து கொண்டால் ஒருவன் நோய் வராமல் தடுத்துக் கொள்ள முடியும். இதனை அறிந்து பண்டைத் தமிழர்கள் நோயற்ற வாழ்க்கையுடனும் உடல் Q12__________ வாழ்ந்து வந்துள்ளனர்.

ஒருவன் நீண்டகாலம் உயிர் வாழ்வதற்குத் தேவை உணவாகும். ஒருவன் உட்கொள்ளும் உணவு அவனது தேவைக்கேற்ப இல்லாமல் மிகுதியானாலும் குறைந்தாலும் அவனுக்கு நோய் வரும். மிக அதிக உணவை உண்ணுகிறவனிடத்தில் நோய் Q13__________ நிலைத்திருக்கும். செரிக்காமல் உணவு உண்பதால் அது நஞ்சாகும். ன் தகுதியும் அதற்கு ஏற்ற உணவும் காலமும் ஆராயாமல் வேண்டிய உணவை வேண்டியதொரு காலத்தில் வயிற்றுக்குத் தேவையான அளவின்றி ஒருவன் மிகுதியாக உண்டால் அவனிடத்தில் நோய்கள் மிக அதிகரிக்கும் Q14__________ மருந்து என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் கருத்துகளாகும். சோம்பலும், கோபம் கொள்ளுதலும்கூட உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. அதிக உணவு உண்பதால் சோம்பல் உண்டாகி, நோய்கள் பெருகி உடல் நலம் Q15__________.

ஆகவே, நோயெல்லாம் நம்முடைய பழக்கங்களினாலும் பண்பினாலும்தான் பெரும்பாலும் வருகின்றன என்பது திருவள்ளுவரின் தீர்க்கமான முடிவாக உள்ளது.

1 வந்ததற்கு
2 என்பது
3 நீங்காமல்
4 என்பவை
5 ஆரோக்கியத்துடனும்
(6) கெடுகிறது
7 பாதிக்கிறது
8 நீங்கி
9 வருவதற்கு
10 வலிமையுடனும்

## C4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு விடை தருக.

ஒரு நாட்டின் வரலாறு, நாகரிக வளர்ச்சி, பண்பாடு, கலைநுட்பம், இயற்கை விஞ்ஞான வரலாறு முதலானவற்றைப் பற்றி மக்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள உற்ற துணையாகவும் கருத்துக் கருவூலமாகவும் விளங்குவது அரும்பொருளகமேயாகும். இது பழமையும் அருமையும் நிறைந்த பொருட்களைத் தொகுத்துக் காட்சிக்கு வைத்திருக்கும் ஓர் இடமாகும்.

நம் நாட்டின் தேசிய அரும்பொருளகம் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள மிகப் பழமையானவற்றுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்த அரும்பொருளகம் தோன்றக் காரணமாக விளங்கியவர் சர் ஸ்டாம்போர்டு ராஃபிள்ஸ் ஆவார். இந்தியப் பாட்டாளிகளின் உழைப்பாலும் அந்தமான் தீவிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறைக் கைதிகளின் அயரா உழைப்பாலும் உருவாகிய அரும்பொருளகக் கட்டடத்தை அன்றைய கவர்னர் ஜெனரலாக விளங்கிய சர் ஃபிரெட்ரிக் வெல்ட், இங்கிலாந்து அரசி விக்டோரியா மகாராணியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு நாளில் அதிகாரபூர்வமாகத் திறந்துவைத்தார்.

நம் அரும்பொருளகத்தில் மலேசியா, சிங்கப்பூர் மற்றும் நம் அண்டை நாடுகளான இந்தோனீசியா, தாய்லாந்து முதலிய நாடுகளைச் சேர்ந்த மக்களின் தலைசிறந்த, பழமைமிக்க கலைப்பொருட்கள், ராஃபிள்ஸ் பெருமகனாரின் கையெழுத்துப் படிகள், அன்றைய ஆளுநர்களின் கையெழுத்துப் படிகள், இயற்கை வரலாறு, மானிட வரலாறு, விலங்கியல் வரலாறு முதலியன காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அவை நம் நாட்டின் வரலாற்றைப் பல்வகை கோணங்களில் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன

வினாக்கள்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் அடைப்புக்குள் எழுதுக.

Q16 எதனை அரும்பொருளகம் என்று கூறலாம்?

1. வரலாற்றையும் நாகரிகத்தையும் கற்றுத்தரும் இடத்தை
2. பண்பாட்டையும் கலைநுட்பத்தையும் போற்றிப் பாதுகாக்கும் இடத்தை
3. பழமையான பொருள்களை அடுக்கிக் காட்சிக்கு வைக்கும் இடத்தை
4. பழைய அரிய பொருள்களைப் பார்வைக்கு வைக்கும் இடத்தை (______)

Q17 சிங்கப்பூரில் அரும்பொருளகம் உருவாக முக்கியக் காரணம் எது ?

1. சர் ஸ்டாம்போர்டு ராஃபிள்ஸ் செய்த முயற்சி (______)
2. இந்தியப் பாட்டாளிகளின் கடுமையான உழைப்பு
3. அந்தமான் சிறைக் கைதிகளின் அயராத உழைப்பு
4. கவர்னர் ஜெனரல் சர் ஃபிரெட்ரிக் வெல்ட்டின் ஆட்சி

Q18 பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன?

1. அண்டை நாடுகளின் பழைய கலைப்பொருட்களைச் சேமித்து வைப்பதற்காக
2. பழைய கையெழுத்துப் படிகளைப் பாதுகாத்துப் பயன்படுத்துவதற்காக
3. நம் நாட்டின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள உதவுவதற்காக
4. இயற்கை, மானிட, விலங்கியல் வரலாறுகளை விளக்குவதற்காக (______)

More papers at www.testpapersfree.com

பகுதி 2

நாகரிகத்தால் மனிதனது சிந்தனை சீர்பெறத் தொடங்கியது; மற்ற உயிரினங்களுக்கும் தனக்கும் உள்ள வேறுபாட்டை உணரத் தொடங்கினான். அன்று பிறந்ததுதான் சிந்திக்கும் ஆற்றல். இந்த ஆற்றலே கருத்தாழம் கொண்ட சொற்களின் பிணைப்புக்களாகப் பின்னர் மாறின. அந்தப் பிணைப்புகளே காலப்போக்கில் கருத்தாழம் கொண்ட பாடல்களாக மாறின.

அந்தப் பாடல்களே மனிதனின் அறியாமை என்னும் நோயைப் போக்கும் அருமருந்தாக விளங்கின. அந்த மருந்தே கால வெள்ளத்தால் அழிக்க முடியாத இலக்கியமாக இன்றும் நிலைத்து நிற்கின்றது. இத்தகைய இலக்கியங்கள் பல இலக்குகளை உடையவையாக விளங்குகின்றன. மேலும் பல கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டுள்ளன. எப்படியும் வாழலாம் என்ற மனிதனை இப்படித்தான் வாழவேண்டும் என்ற ஒரு வரையறைக்குள் நிறுத்தி, அவன் சிறப்பாக வாழ வழிகாட்டுகின்றன. இத்தகைய இலக்கியம் உலக மொழிகள் அனைத்திலும் அறிவு மிக்க பெரியோர்களால் படைக்கப்பட்டுள்ளன. எனவே சிறப்புப் பெற்ற உலக மொழிகளுள் ஒன்றாகிய தமிழ்மொழியில் அமைந்துள்ள இலக்கியங்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.



Q19 மனிதனுடைய சிந்தனை எப்பொழுது செம்மை பெறத் தொடங்கியது?

(1) நாகரிகம் ஏற்பட்டபொழுது
(2) உயிரினங்களின் வேறுபாட்டை உணர்ந்தபொழுது
(3) சிந்திக்கும் திறன் ஏற்பட்டபொழுது
(4) பகுத்தறிவு ஏற்பட்டபொழுது ( )

Q20 இலக்கியம் எப்போது தோன்றியது?

(1) பகுத்தறிவை வெளியிட்டபோது
(2) மனநிலையில் வளர்ச்சி அடைந்தபோது
(3) கருத்தாழம் கொண்ட சொற்கள் உருவானபோது ( )
(4) சிந்தனையைத் தூண்டியபோது

More papers at www.testpapersfree.com

4. சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

“ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்கும் பிளவு என்பது சிங்கப்பூரர்களிடையே இருக்கக் கூடாத ஒன்று. இருப்போர் இல்லாதோர், வெற்றியாளர் தோல்வியடைந்தவர்கள் என்று பலதரப்பட்டவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். ஆனால், நம்மில் பிளவு ஏற்படுவதற்கு அதை ஒரு காரணமாகக் கொள்ளக் கூடாது” என்று பிரதமர் லீ சியன் லூங் சிங்கப்பூரர்களுக்கு வலுவான வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

“சிங்கப்பூரர் ஒவ்வொருவரும் வசதியாக வாழும் வகையில் நல்ல வீடமைப்பு, கல்வி, சுகாதாரப் பராமரிப்பு போன்ற பல அம்சங்களைத் கொண்ட சமுதாயத்தை நாம் அமைத்திருக்கிறோம். இது நமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் முயற்சிகளுக்கும், அடித்தளத் தலைவர்கள் மற்றும் தொண்டூழியர்களின் சேவைகளுக்கும் நல்ல முடிவை அளித்து வந்திருக்கிறது. பகைமை உணர்வு நம்மை ஆட்கொள்ள அனுமதித்தால், நமது சமுதாயம் பாழாகிவிடும். அனைவரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள். அது ஒருகாலும் நடைபெற நாம் அனுமதிக்கக் கூடாது” என்று குறிப்பிட்ட பிரதமர் லீ, “அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் ஆதரிப்பவர்களாக இருந்தாலும் சரி, அதில் மாற்றத்தை எதிர்பார்ப்பவர்களாக இருந்தாலும் சரி, நாட்டின் தலைமைத்துவத்துக்கும் மக்களுக்கும் இடையே ஒற்றுமையும் நம்பிக்கையும் வலுப்பட்டிருப்பது முக்கியம்” என்றார்.

“இளைய சிங்கப்பூரர்களாகிய நீங்கள் சிங்கப்பூரின் எதிர்காலத்தைப் பிரதிநிதிக்கிறீர்கள். நம் நாடு எதிர்நோக்கும் விவகாரங்களில் நீங்கள் முன்வந்து உங்கள் பங்கைச் செலுத்த வேண்டும். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு பொறுப்புகளை ஏற்க நீங்கள் முன்வந்தால், சிங்கப்பூரின் எதிர்காலம் பிரகாசமானதாக இருக்கும்” என்றார் பிரதமர் லீ. தாங்கள் வழங்கிய உறுதி மொழிகளை நடைமுறைகளாக்கி, அதன்வழி சிங்கப்பூரர்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதற்குத் தாமும் தமது குழுவினரும் தொடர்ந்து பணியாற்றுவோம் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

சிங்கப்பூரை நல்ல வேலைகளை உருவாக்கும் இடமாக ஆக்குதல், நமது பிள்ளைகள் முதல் தரக் கல்வியையும் வாழ்க்கையையும் பெறும் இடமாகச் சிங்கப்பூரைக் கட்டிக்காத்தல் நமது நோக்கமாகும். மேலும் பல இன மக்கள் ஒற்றுமையாக வாழும் இடமாக, நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் பணியில் அனைவரும் பங்கு வகித்தல்;



More papers at www.testpapersfree.com

குடிமகன் ஒவ்வொருவனும் பெருமைப்படக்கூடிய வகையில் அனைவருக்கும் சொந்தமான சிங்கப்பூரைப் பலப்படுத்துதல் ஆகிய தொலைநோக்குக்குச் சிங்கப்பூரர்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர்.

மிக வேகமாக மாறிவரும் போட்டித் தன்மை மிக்க சூழலுக்கேற்ப சிங்கப்பூரும் தன்னை மாற்றிக்கொண்டு, எதிரே வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள ஆயத்த நிலையில் இருப்பது அவசியம். அதற்கு அனைவரும் கைகோர்த்துச் செயல்பட பிரதமர் லீ சியன் லூங் சிங்கப்பூரர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

(தழுவல்: தமிழ்முரசு)

**Q21.** நம்மிடையே எவற்றின் அடிப்படையில் பிளவு ஏற்படக்கூடாது?

**Q22.** "அது ஒருகாலும் நடைபெற நாம் அனுமதிக்கக்கூடாது" என்ற வாக்கியத்தில் 'அது' என்பது எதைக் குறிக்கிறது? விளக்குக.

**Q23.** சிங்கப்பூரின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருப்பதற்கு இளையர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளாகப் பிரதமர் லீ கூறுபவை யாவை?

**Q24.** சிங்கப்பூரின் தொலைநோக்குச் சிந்தனை யாது?

**Q25.** பிரதமர் சிங்கப்பூரர் விடுக்கும் வேண்டுகோள் என்ன?

<u>பொருள் தருக</u>

**Q26.** வலுவான

**Q27.** அம்சங்களை

**Q28.** பிரதிநிதிக்கிறீர்கள்

**Q29.** வடிவமைக்கும்

**Q30.** தொலைநோக்கு

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

Set 13 - விடைகள்

அதிகச் சம்பளம் கொடுப்பதாக ..........

Q1. 8 Q2. 4 Q3. 9 Q4. 10 Q5. 2

Q6. . . வேலையில்லா பிரச்சினையை அதிகரிக்கின்றது.

Q7. . . பள்ளித் தமிழ் மன்றத்தால் இளையர்களிடையே கொண்டாடப்படுகிறது.

Q8. . . நம் சிந்தனை விரிவடையாது.

Q9. . . நலனில் அக்கறை உடையவர்கள் ஆவர்.

Q10. . . சிலர் கொண்டுள்ள தவறான எண்ணம் ஆகும்.

Q11. 9 Q12. 5 Q13. 3 Q14. 2 Q15. 7

Q16. 4 Q17. 1 Q18. 3 Q19. 1 Q20. 1

21) நம் நாட்டில் இருப்போர் இல்லதோர், வெற்றி அடைந்தவர்கள் தோல்வியுற்றவர்கள் என்று பல தரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இவற்றின் அடிப்படையில் நம்மிடையே பிளவு ஏற்படக்கூடாது.

22) 'அது' என்பது படைமை உணர்வு நம்மை ஆட்கொள்ளக்கூடாது என்பதைக் குறிக்கிறது. அவ்வாறு நேர்ந்தால் நமது சமுதாயம் பாழாவதோடு அனைவரும் பாதிப்படைவார்கள்.

23) சிங்கப்பூர் எதிர்நோக்கும் விவகாரங்களில் இளைய சிங்கப்பூரர்கள் தாமாகவே முன்வந்து தங்கள் பங்கைச் செலுத்த வேண்டும். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு பொறுப்புகளை ஏற்க அவர்கள் முன் வந்தால் சிங்கப்பூரின் எதிகாலம் ஒளிமயமானதாக இருக்கும் என்று இளையர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றி பிரதமர் லீ கூறுகிறார்.

24) சிங்கப்பூரை நல்ல வேலைகளை உருவாக்கும் இடமாக ஆக்குதல், பிள்ளைகளுக்குக் முதல் தரக் கல்வியையும் வாழ்க்கையையும் பெறும் இடமாகச் சிங்கப்பூரைக் கட்டிக் காத்தல், மேலும் பல இன மக்கள் ஒற்றுமையாக வாழும் இடமாக நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் பணியில் எல்லோரும் பங்கு வகித்தல், ஒவ்வோரு குடிமகனும் பெருமைபடக் கூடிய வகையில் அனைவருக்கும் உரிய சிங்கப்பூரைப் பலப்படுத்துதல் ஆகியவையே சிங்கப்பூரின் தொலைநோக்குச் சிந்தனைகள் ஆகும்.

25) மிக வேகமாக மாறிவரும் போட்டித்தன்மை மிக்க சூழலுக்கேற்ப சிங்கப்பூரும் தன்னை மாற்றிக் கொண்டு எதிரே வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதே பிரதமர் சிங்கப்பூரர்களுக்கு விடுக்கும் வேண்டுகோளாகும்.

சொற்பொருள்:

26) மறுக்க முடியாத அளவிற்கு

27) பல பகுதிகளாகக் கொண்ட திட்டங்கள்

28) சார்பாக செயல்படுகிறீர்கள்

29) உருவாக்கும்

30) முன்யோசனை நிறைந்த பார்வை

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com